RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2512

OPEN ACCESS

# குலோத்துங்கன் கவிதைகளில் மனித மாண்புகள்

ரா. ஆர்த்தி [அ, *], சு. பரணி [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-43, தமிழ்நாடு, இந்தியா

# Human Dignities in Kulothungan Poems

R. Arthi [a, *], S. Bharani [a]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher education for Women, Coimbatore-43, Tamil Nadu, India

* Corresponding Author: arthiramalingam97@gmail.com

Received: 04-08-2022
Revised: 29-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Human life is great. Human birth is one of the rarest of births. Only human beings have a uniqueness that no other birth has. Only man speaks, writes, studies, works, struggles, and labors in poverty. Olavaiyar says that it is rare to be born monitarai. The sixth sense is the gifted man who acquires reason. That is why it can bring other planets under its dominion. Although many appreciate the glory of such qualities of man, not all fully realize his astonishing power. But the poet Kulothungan is greatly surprised. That is why the purpose of this article is to explore the way in which the poet has praised and praised man in his poems considering man as more than God.

**Keywords:** Kulothungan, Human life, Dignities, God

## முன்னுரை

குலோத்துங்கன் தன் கவிதைகளில் அறிவியலை மட்டும் முன்னிறுத்தாமல் மனிதன் கடைப்பிடித்து நன்முறையில் வாழ வேண்டிய மனித நேய பண்புகளையும் பலஇடங்களில் குறிப்பிட்டுள்ளார். அறிவியலையும் தமிழ் மொழியையும் போற்றுகின்ற குலோத்துங்கன் கவிதைகள் சமுதாயச் சிந்தனைகளையும் மனிதநேய மாண்புகளையும் வலியுறுத்தி நிற்கின்றது. மானுட வாழ்வானது உயர்வதற்கும் மனிதர்கள் தங்கள் குறிக்கோள்களில் எவ்வாறு வெற்றி அடைய வேண்டும் என்பதையும் மனிதன் தன் வாழ்வில் செழுமையுடன் வாழும் விதத்தையும் இவருடைய கவிதைகளின் வாயிலாக அறியலாம்.

## பண்பாடு

பண்பாடு என்பது சமூகத்தில் காணப்படும் மனிதனின் பழக்கவழக்கம், கல்வி, தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றில் அவன் அடையும் வளர்ச்சி யாவும் பண்பாட்டைக் குறிப்பதாகும். ‘பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றின் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்’ என கார்த்திகேசு சிவத்தம்பி பண்பாட்டிற்கு விளக்கமளிக்கிறார் (Karthikesu Sivathambi, 1994).

## மானுடப் பண்புகள்

'மனிதனுடைய பண்புகளும் குணங்களும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்தது தான் இந்தமனிதம்' என்கிறார் கே.பாலதண்டாயுதம் (Gowri, 2011). மனிதம் என்பது இந்நிலவுலக மனிதர்அனைவரையும் குறிக்கும். மன்+இதம் என்று பிரித்து நிலைபேற்றை இதமாக அதாவது, நன்மையாக இன்பமாக இருதயத்துடன் இணைத்துச் செய்ய வேண்டும்என்று பொருள் பெறுகிறது. கவிஞர் குலோத்துங்கன் தம் கவிதையில்,

"சிந்தையும் தோளும் சேர்ந்தது மனிதம்"

என்கிறார். அதாவது உடல் இல்லாத ஒரு உள்ளம் தனியாக இல்லை. உள்ளமில்லாத உடலும் மனிதனாக முடியாது (Kulothungan 2007). அது போல உழைப்பு ஒரு பக்கம் சிந்தனை மறுபக்கம். உழைப்பில்லாத சிந்தனையினால் பயன் இல்லை. சிந்தனையில்லாதமுயற்சியினாலும் பயன் இல்லை. இவை இரண்டும் இணைந்து செயல்படுவது தான்மனிதம் என்கிறார் கவிஞர். சிந்தனை மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதுதான் நம் தனித்திறனை வளர்ப்பதாகும். நம் உள்ளுணர்வு உணர்த்தும் உண்மைகளே உலகத்துக்கேற்ற உண்மைகள்ஆகின்றன. கிரேக்க ஞானி பிளேட்டோவும் கவிஞர் மில்டனும் என்ன சிந்தித்தனர் என்பதை எழுதவில்லை. தாம் சிந்தித்துத் தெளிந்ததையே எழுதினார்கள். எனவே, மானுடத்திற்கு சிந்தையும் செயலுமே அடிப்படையாக அமைவதை உணர முடிகிறது.

'மானிடம் மனிதத் தன்மை' என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது (Crea, 1998). மானுடம் என்ற சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல்லாக Humanity, mankind என்பன தரப்பட்டுள்ளன. மானுடம் எனும் சொல்லுக்கு மானிட சாதி, மானிட தொகுதி, மனிதத் தன்மை, மனிதப் பண்பு, அன்பு, மனித நல முன்னேற்றம் போன்றவை சொற்பொருளாகஅகராதிகளும் கலைக்களஞ்சியங்களும் விளக்கம் தருகின்றன.

## சங்க காலத்தில் மானுடம்

மனிதனைப் பாடுவதற்கு எழுந்ததே இலக்கியங்கள். ஆகவே, இலக்கியங்களில்மானுடத் தன்மை பரந்து விரிந்து காணப்படுகிறது. மானுடம், மனிதம், மானுடன், மானிடத்தன்மை போன்ற பல்வேறு பதங்கள் இலக்கியங்களில்எடுத்தாளப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறும்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்றும்,

"பெரிதே உலகம் பேணுநர் பலரே"

என மானுடத்தைப் பாடுகிறது (Puliyur Kesikan 2013).

## மானுடக் கவிஞர் குலோத்துங்கன்

கவிஞர் குலோத்துங்கன் மானுடத்தைப் பற்றிப் பாடியுள்ளதை பத்மநாதன் என்பவர் 'மானுடம் பாடுவதில் மனநிறைவு கொள்பவன். நான் மானிட சமுதாயத்தின் குறைகளும், நிறைகளும் என் சிந்தனைக்கு வற்றாத ஊற்றுகள். மனிதன் நாளுக்கு நாள் வளர்பவன், உயர்பவன். அம்முயற்சியில் ஓய்வு இல்லாது உழைப்பான். முடிவு என்பது இல்லாத முன்னேற்றம் பயணத்தை மேற்கொண்டிருப்பவன். அதனினும் புனிதமான யாத்திரையும் இல்லை, உயர்ந்ததான காவியப் பொருளும் இல்லை, இந்த பயணத்தை நான் வெளியில் நின்று பார்த்து விமர்சிக்கவில்லை. ஒரு பயணியாக நின்று பாடியிருக்கிறேன்' என்று குறிப்பிடுகிறார் (Kulothungan, 2007).

பா.வீரமணி என்பவர் 'இக்காலக் கவிஞர்களில், மானுடத்திற்கு முதலிடம் வழங்கி, அதனைப் போற்றுவதில் தலையாயவராக இவரே (குலோத்துங்கன்) காட்சியளிக்கிறார். கவிஞர் தமிழைப்

பாடினாலும், சாதியொழிப்பைப் பாடினாலும், பெண்மையைப் பாடினாலும், உழைப்பைப் பாடினாலும் அங்கு முதலிடம் பெறுவது மானுடமேயாகும்' என்கிறார் (Veeramani, 2010).

## கவிஞர் குலோத்துங்கன் காணும் மனிதன்

கவிஞர் குலோத்துங்கன் மனிதனைத் தனிப்பட்ட கண்ணோட்டம் கொண்டு பார்க்கிறார். மனிதன் சிந்திக்கும் திறன் மிக்கவன் சிந்தித்ததைச் செயல்படுத்துபவன் செயல்படுத்தும் முயற்சியுடன் உழைப்பவன் எண்ணிப் பார்க்கும் ஆற்றல் பெற்றவன் ஏற்றம் மிக்கவன் தோல்வி கண்டும் துவளாதவன் கருத்துகளில் மாற்றம் கொண்டவன் முன்னேற்றம் தேடுபவன் முடிவில்லாதவன் வையத் தலைவன் மானுடன் என்கிறார்.

"கனவும் கற்பனைக்

கடலும், கரையிலா

மனமும், கொண்ட நீ

வாழ்வின் மன்னன்

படைப்பின் உச்சி நீ

வேதத் தலைவன் நீ

கவிஞன் கானிடை

வானம்பாடி நீ"

என்றும்,

"பகுத்துணர் அறிவின்

பீடும் கொண்ட

பெரியோன்!

முதல்வன் நீ

ஆக்கிய திறத்தின்

ஆசான்

அறிவியல்

நெறியின் தந்தை நீ"

எனக் கூறுகிறார் (Kulothungan, 2007). மானிடரின் ஆற்றல் அளப்பற்கரியது. இவர் மானிடத்தின் மேல் கொண்ட நம்பிக்கைஇவரது கவிதையின் வழி புலனாகிறது. அவனால் முடியாதது என்பதொன்று இல்லவே இல்லை என்பதை கவிஞருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் கொடுத்துள்ள அழுத்தத்தின் மூலம் உணர முடிகின்றது. இவர் கருத்துப்படி மனிதன்கண்டு பிடிக்காத கருவிகளில்லை. அறிவால், ஆராய்ச்சியால் அவன் அகிலத்தையேதன் கைக்குள் அடக்கி விட்டான் என்பதைச் சொல்லிச் சொல்லி மகிழ்வதைக் கவிஞரின் கவிதைகளில் காண முடிகிறது. மனிதனின் திறமையைத் தெய்வ நிலைக்கு உயர்த்திக்காட்டும் வகையில் கவிஞர்,

"மனிதனின் மேல் ஒரு தேவனை இதுவரை

வையகம் கண்டதில்லை"

என்றும்,

"வரைகளும் அளந்து நிற்கும்

வகுத்த கொள்கை

முறைகளின் முறைகள் கண்ட

மூலத்தின் முதல்வன் மாந்தன்”

என்றும், மனிதனை இறைவனுடன் ஒப்பிட்டு, கவிஞர் தன் கவிதையில் மனிதனின் உயர்வான ஆற்றலைப் பதிவு செய்கிறார் (Kulothungan, 2007). மனிதன் காணும் முன்னேற்றப் பயணத்திற்கு இடையறாக வருவது பயிர்களுக்கிடையே தோன்றும் களைகள் போன்று, நல்ல கொள்கைகளைக் கொண்டவர்கள் நடுவில் தோன்றும் புல்லுருவிப் புல்லர்கள் தோற்றுவிக்கும் கருத்து வேறுபாடுகள் தாம். மனித வாழ்க்கை என்பது கரடுமுரடான பாதையைக் கொண்டது. எப்பொழுது சோதனை ஏற்படுகிறதோ அப்பொழுது சாதிக்க வேண்டும் என்ற வேகம் ஏற்படுகிறது. வெற்றியை எட்டும் போதும் ஏற்படும் சறுக்கலையும் கவிஞர்,

“காண வேண்டிய இலக்கின்

திசையை காட்டுங்கள்

கல்லும் முள்ளும் நிறைந்த

பாதை என்று கவலைப்படாதீர்,

காடும் கடந்து, நதியும் நீந்தி

மலையும் ஏறுவோம்”

என்று தன்னம்பிக்கைக்குத் தடம் பதிக்கின்றார் (Kulothungan, 2007). மனிதன் தன் பயணத்தில் எத்தனையோ, இடர்களைச் சந்தித்திருக்கலாம், சோர்ந்து மிருக்கலாம். தடைகள் மானிட வளர்ச்சியைத் தடுத்திருக்கலாம் என்றாலும் அனைத்தையும் மீறி வளரும் ஆற்றல் கொண்டது மானிடம் என்கிறார் கவிஞர்.

“நாழி அங்குலம் நகர்ந்து ஓய்விறந்(து)

ஊழியுள்ள நான் ஊர்ந்தும், பேரிருள்

காடு பாலை கடந்தும், உண்மைகள்

தேடும் மாபெரும் செலவுகை விடோம்”

காடு, பாலைவனம் ஆகியவற்றைக் கடந்து உண்மைகளைத் தேடும் போது பலசிக்கல்கள் ஏற்படலாம் (Kulothungan, 2007). நெருக்கடிகள் தோன்றலாம். இவற்றால் நாம் திணறலாம். இந்தச் சிக்கல்களைக் கடந்து தம் முயற்சியைக் கைவிடலாம். வெற்றியை அடையவேண்டும் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

## முடிவுரை

கவிஞர் குலோத்துங்கன் மனிதனின் சிறப்பையும் அவனது குறிக்கோளையும் தமது கவிதைகளில் அழகுற சிறப்பித்துள்ளார். மனிதன் தன் வாழ்வில் வெற்றிப் பாதையை அடைவதற்கு பல தடைகள் வந்தாலும் அதனை எதிர்க்கொண்டு தன் வாழ்க்கையில் வெற்றி என்னும் இலட்சியப் பாதையை அடைதல் வேண்டும் என்பதை கவிஞரின் கவிதைகளின் வழி அறிய முடிகிறது. கவிஞர் மனிதனின் உள்ளமே கோவில் என்கிறார். அவனை விட இவ்வுலகில் எந்த சக்தியும் பெரிது அல்ல எனவும், மனிதனை கடவுளுக்கு நிகராகப் போற்றுவதையும் அறிய முடிகிறது. மானுடம் ஆட்கொண்ட முன்னேற்றத்தை குலோத்துங்கள் அழகாகக் கவிதைகளில் படைக்கின்றார். மானுடம் உயர வேண்டும் என்ற தம் எண்ணத்தைத் தம் படைப்பில் அறிவுறுத்துகின்றார். மனிதம் என்பது தனி மனிதனை செம்மைப்படுத்தி சமூகத்தோடு நட்புக் கொண்டு சமூக வளர்ச்சிக்குத் துணை புரிவது, மனிதன் முன்னேறும் பாதையில் ஆயிரம் தடைகள் வந்தாலும், அதை உடைத்தெறிந்து அவன் மேல்

செல்கின்றான், மனிதனை மிஞ்சிய ஒரு சக்தியில்லை உள்ளமென்னும் கோவிலில் மனிதனே கடவுளாகவும் விளங்குகிறான் என்பதை உணர்த்துகின்றார். மனிதத்தின் வளர்ச்சியே மனித நேயமும் மானுடமும் ஆகும். இந்த மானுடமே குலோத்துங்கன் கவிதைகளில் சிறந்து விளங்குகிறது.

## References


Crea, (1998) Crea Tamil Agarathi, Crea Pathippagam, Chennai, India

Gowri, P. (2011) Kulothungan Kavithaikalil Ariviyal Parvaiyaum Mannudathuvamum, Doctoral Dissertation, Bharathiar University, Coimbatore, India.

Karthikesu Sivathambi (1994), Tamil Samoogamum Panpaatin Meel Kandupidipum, New Century Book House (P) Ltd, Chennai, India.

Kulothungan (2007) Kulothungan Kavithaikal, Bharathi Pathipakkam, Chennai, India.

Puliyur Kesikan (2013) Purananuru Moolamum Uraiyum, Saratha Pathippkam, Chennai, India.

Veeramani, P. (2010) Kulothungan Kavithaikal Oru Aivu Kanattam Tirunelveli Thennidia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License